# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,579 — 1958 නොවැම්බර් 7 වැනි සිකුරාදා — 7.11.1958

11,579 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

#### 1958 ம் ஆண்டின் 15 ம் இலக்க ஊழியர் சேமநிதிச் சட்டம் அறிவித்தல்

**சட்டத்திற்குட்பட்ட தொழில்கள்**

1958 ம் ஆண்டின் 15 ம் இலக்க ஊழியர் சேமநிதிச் சட்டத்தின் 46 ம் பிரிவின் பிரகாரம், இயற்றப்பட்டு 1958 ம் ஷூ ஐப்பசி மீ 31 ந் தேதி யன்று வெளிவந்த 11,573 ம் இலக்க அரசாங்க அனுபந்த கஸெற்றில் பிரசுரமான ஊழியர் சேமநிதி ஒழுங்கு விதிகளுக்குக் கவனஞ்செலுத்த வேண்டுமென சகல முதலாளிகளுக்கும், ஊழியருக்கும், சேமநிதிகளை யும் உதவுதொகை-இளைப்பாற்றுச் சம்பளத்திட்டங்களையும் நிருவகிப் போருக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2 ம் ஒழுங்கு விதியின்படியும் ஒழுங்கு விதிகளின் முதலாம் அட்டவணை யின் படியும் இலங்கை அரசாங்கத்திற்கோ, யாதாயினும் தல அதிகாரிக் கோ, தலத்தாபன சேவைக்குழுவுக்கோ உட்பட்டதல்லாத மற்றும் தொழில் ஒவ்வொன்றும் சட்டத்திற்குட்பட்ட தொழிலெனப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

**ஆயினும், சட்டத்திற்குட்பட்ட பல்வேறு தொழில்கள் விடயத்திலும் உதவுதொகை செலுத்தவாரம்பிக்குந் தேதிகள் சட்டத்தின் 10 (3) ம் பிரிவின் பிரகாரம், ஓர் அறிவித்தல் மூலம் தொழில், வீடமைப்பு, சமூகசேவை மந்திரியால் நியமிக்கப்படும்வரை ஒரு முதலாளியும் ஓர் ஊழியரும் இந்நிதிக்கு உதவுதொகை செலுத்தக் கடமைப்பட்டோராகார்.**

சட்டத்திற்குட்பட்ட பல்வேறு தொழில்களும் உதவுதொகை செலுத்தும் விடயத்தில், படிப்படியாக உட்படுத்தப்பட்டு, சட்டத்திற்குட்பட்ட பல்வேறு தொழில்களிலும் உதவுதொகைகள் செலுத்தவாரம்பிக்குந் தேதிகள் காலத்திற்குக் காலம் கஸெற்றிலும் பத்திரிகைகளிலும் வெளியிடப்படும்.

ந. மகாதேவா,
பதில் பிரதித் தொழில் அதிபர்,
(சட்ட அனுசரணை),
தொழில் அதிபருக்காக.

கொழும்பு,
1958 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ந் உ.

---

#### 1958 ம் ஆண்டின் 15 ம் இலக்க ஊழியர் சேமநிதிச் சட்டம் அறிவித்தல்

**அங்கீகரிக்கப்பட்ட சேமநிதிகளும் இளைப்பாற்றிச் சம்பளத் திட்டங்களும்—27 ம் பிரிவு**

1958 ம் ஆண்டின் 15 ம் இல. ஊழியர் சேமநிதிச் சட்டத்தின் 27 ம் பிரிவின் தேவைகளின் பிரகாரம், இப்பொழுது நடைமுறையிலிருந்து வரும் சேமநிதிகளையும் உதவுதொகை—இளைப்பாற்றிச் சம்பளத்திட்டங் களையும் நிருவகிப்போர் யாவரும் சேமநிதிகள் அல்லது உதவுதொகை—இளைப்பாற்றிச் சம்பளத்திட்டங்கள் சம்பந்தமாக பின்வரும் விவரங்களை **1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ந் தேதிக்கு முன்னர்** அனுப்பி வைக்க வேண்டுமென மேற்கூறிய நிருவாகிகள் யாவரின் கவனத்திற்கும் கொண்டு வரப்படுகிறது :—

(1) நிதியின்/உதவுதொகை—இளைப்பாற்றிச் சம்பளத் திட்டத்தின் பெயரும் தொடங்கிய தேதியும்.

(2) நிதியில் அங்கம் வகிக்கும் ஊழியரினது வகுப்பும் அல்லது இனமும், நிதியில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு வகுப்பிலும் அல்லது இனத்திலுமுள்ள அங்கத்தவர்களின் தொகைகளும்.

(3) முதலாளியின் பெயரும் விலாசமும், நிதியில் ஒன்றுக்கு மேற்பட்ட முதலாளிகள் உதவுதொகை செலுத்துமிடத்து, அம்முதலாளி கள் யாவரினது பெயர்களும் விலாசங்களும்.

(4) (அ) முதலாளியால் (ஆ) ஊழியரால் செலுத்தப்படும் உதவு தொகைகளின் வீதமும், உதவுதொகை அடிப்படைச் சம்பளத்தின் பேரிலா அல்லது மொத்தச் சம்பாத்தியத்தின் பேரிலா செலுத்தப் படுகிறதென்பதும்.

(5) இந்நிதியின் பணத்தில் என்ன தொகை ஏற்கெனவே முதலீடு செய்யப்பட்டுள்ள தென்பதும் முதலீடுகள் பற்றிய விவரங்களும்.

(6) நிதியின் பணத்திலிருந்து நிதியின் அங்கத்தவருக்குக் கடனாகக் கொடுக்கப்பட்ட பணங்களின் மொத்தத் தொகை.

(7) அங்கத்தவர்கள் அல்லது, அங்கத்தவர்கள் இறக்க நேரிடின், அவ்வங்கத்தவர்களின் உரிமைக்காரர் அல்லது நியமனஸ்தர் :

(அ) சாதாரணமாக ஓய்வு பெறும் காலத்து ;

(ஆ) சாதாரணமாக ஓய்வு பெறும் தேதிக்கு முன்பு தொழில் தீரும் பொழுது ;

(இ) அங்கத்தவர் இறக்கும் பொழுது.

சந்தர்ப்பத்திற் கேற்றவாறு, உதவுதொகைகளைத் திருப்பிப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது இளைப்பாற்றிச் சம்பளங்களைப் பெற்றுக் கொள்ளு தற்கு என்ன நிபந்தனையின் கீழ் உரித்துடையாரென்பது.

(8) கடை, காரியாலய ஊழியர் சட்டத்திற்குட்பட்ட அல்லது சம்பளத் தீர்ப்புச் சங்கச்சட்டத்திற்குட்பட்ட கழிவுகளின் நோக்கங்களுக்காக, சேம நிதி/உதவுதொகை—இளைப்பாற்றிச் சம்பளத்திட்டம் தொழிற் பகுதி யால் அங்கீகரிக்கப்பட்டதா வென்பதும் அது அவ்விதம் அங்கீகரிக்கப் பட்டிருப்பின் அத்தகைய அங்கீகாரம் பற்றிய தொழிற் பகுதியின் குறிப்பும்.

(9) மேற்கூறிய ஊழியரில் எவராயினுமொருவர் சம்பந்தமாக அல்லது அவர்கள் யாவரும் சம்பந்தமாக வேறு சேமநிதி யாதாயினும் அல்லது உதவுதொகை—இளைப்பாற்றிச் சம்பளத்திட்டம் யாதாயினும் உண்டா வென்பதும் அப்படியாயின் இவைபற்றிய விவரங்கள் கொடுக்கப் பட்டனவா வென்பதும்.

குறிப்பிட்ட விவரங்களுடன், சேமநிதிப் பிரமாணங்களின் அல்லது உதவுதொகை—இளைப்பாற்றிச் சம்பளத்திட்டப் பிரமாணங்களின் பிரதி யொன்றும் கடைசியாக கணக்குப் பரிசோதனை செய்யப்பட்ட (நிதியின் அல்லது திட்டத்தின்) இருப்பு நிலைக்குறிப்பின் பிரதியும் அனுப்பப்பட வேண்டும்.

கடிதங்கள் யாவும் பின்வரும் விலாசத்திற்கு எழுதப்படவேண்டும் :—

தொழில் அதிபர்,
(ஊழியர் சேமநிதிக் காரியாலயம்),
190, உவக்சோல் வீதி,
கொழும்பு 2.

ந. மகாதேவா,
பதில் பிரதித் தொழில் அதிபர்,
(சட்ட அனுசரணை),
தொழில் அதிபருக்காக.

கொழும்பு,
1958 ம் ஷூ ஒக்ரோபர் மீ 31 ந் உ.

4 A ம் மாதிரிப்பத்திரம்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்

சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் 1 ம் உட்பிரிவின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாதகாலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும் பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக்கிடைத்தாலன்றி, யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி விக்டர் யோசேப்பு அரேல்ட் குணசேகரா ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடை கூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்படவேண்டும்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு கார்த்திகைமீ 4 ந் உ.

வி. யோ. அ. குணசேகரா,
இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ்செய்பவரின் பெயரும் விலாசமும் |
|---|---|
| C 9660—4.8.51 .. | மருதநாயகம்பிள்ளை தேவதாசு, 90/6, புதுச்செட்டித் தெரு, கொழும்பு 13 |
| J 652—13.5.51 .. | பொன்னையா நாராயணசாமி, மேற் பிரிவு, மொக்காத் தோட்டம், மஸ்கேலியா |
| J 1088—16.1.51 .. | சின்னப்பன் ஏழுமலை, செயின்ற் அன்றூசுப் பிரிவு, லக்சபானைக் கூட்டம், மஸ்கேலியா |
| C 8276/I/X—4.8.51 .. | சாகுல் அமீது மகன் " ஏ. எம். எஸ். " முகமது முகைதீன், 25, 1/1A, டாம் வீதி, கொழும்பு |

---

4 B ம் மாதிரிப்பத்திரம்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்

சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் (1) ம், (2) ம் உட்பிரிவுகளின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாதகாலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து இத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி விக்டர் யோசேப்பு அரேல்ட் குணசேகரா ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடைகூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்பட வேண்டும்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு கார்த்திகைமீ 4 ந் உ.

வி. யோ. அ. குணசேகரா,
இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ் செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| C 8458—4.8.51 .. | குரூஸ் அந்தோனி யோசேப்பு அல்லது அந்தோனி யோசேப்பு, 68/33, யம்பட்டாத் தெரு, கொழும்பு | கமலராணி அல்லது கமலாச்சி (மனைவி), மரிய ஜெயசீலி (மகள்), மரியதாஸ் நாஸ் அம்மாள் (மகள்), எட்வேட் சிமியோன் (மகன்), எட்வின் பிருங்கிஸ் (மகன்), வின்சென்ற் சார்ள்ஸ் (மகன்), மரிய பிலோமின் அம்மாள் (மகள்) |
| C 9141—4.8.51 .. | முனியாண்டி கைம்பெண் கறுப்பி, 85/7, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு | முத்துவீரன் (மகன்), இராமன் அல்லது குருசாமி (மகன்), சண்முகம் (மகன்), முத்துவீரி (மகள்), இலெச்சுமி (மகள்), முனியாண்டி (மகன்), சுப்பிரமணியம் (மகன்) |
| C 9488—4.8.51 .. | பண்டாரம் அருணசலம் டேவிட், 370, காலி வீதி, கொள்ளுப் பிட்டி, கொழும்பு | கிறேசு மணி (மனைவி), தேவநேசம் ஒகஸ்ரா (மகள்), சரோசா மேரி அக்னிசு (மகள்), எப்சிபா ஜெசி (மகள்), கொட்வின் தேவமணி சாமுவேல் (மகன்), புளோரு விஜேதாபாய் (மகள்), தங்கராணி பாமாலா (மகள்) |
| C 9632—4.8.51 .. | அப்பாஸ்போய் முல்லா முசாஜி, 15, பழைய புலேயர் தெரு, கொழும்பு | சாகிராபாய் (மனைவி), பத்தாம்பாய் (மகள்), நூர்தீன் (மகன்), அசுக்காரலி (மகன்), பரீதாபாய் (மகள்), அசினாபாய் (மகள்), அன்சாரலி (மகன்) |
| C 9638—3.8.51 .. | மாரிமுத்து முத்தாண்டி, 220, பிச்சோட் ஒழுங்கை, மருதானை, கொழும்பு 10 | சிவகாமி (மனைவி), சிற்றம்பலம் (மகன்), கார்த்திகேசன் (மகன்), சபாபதி (மகன்) |
| C 9649—3.8.51 .. | மாரிமுத்து கறுப்பையா, 369, தெமட்டக்கொடை வீதி, கொழும்பு 10 | இலெச்சுமி (மனைவி), இந்திரா (மகள்), மோகனா (மகள்), கணேசன் (மகன்) |
| CC 5061/I—30.7.51 .. | சந்தணம் சித்தன், நாகத்தனைத் தோட்டம், தொளசுபாகை | மருதாயி (மனைவி), தங்கவேல் (மகன்), மாரியப்பன் (மகன்) |
| CC 5091/I—3.8.51 .. | நாராயணசாமி துரைச்சாமி, நாகத்தனைத் தோட்டம், தொளசுபாகை | தங்கம்மா (மனைவி), சிவகாமு (மகள்), சரசுவதி (மகள்), இராமர் (மகன்) |
| CC 5101/I—30.7.51 .. | அனத்தாதன் இராசன், நாகத்தனைத் தோட்டம், தொளசு பாகை | அங்கம்மாள் (மனைவி), பொன்னம்மாள் (மகள்), இலெச்சுமி (மகள்), கிட்ணன் (மகன்) |

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ் செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| CC 8038/I—2.8.51 .. | ஐயனர் குருசாமி, டோட்டல் ஓயாத் தோட்டம், தொளசுபாகை | பொட்டு (மனைவி) |
| L 7403/I—6.7.51 .. | பெரியண்ணன் கறுப்பையா, தனலெச்சுமி ஸ்ரோஸ், தொளசுபாகை | கறுப்பாயி (மனைவி), விசயகுமாரி (மகள்) |
| L 11213/I—2.8.51 .. | சந்தனம் கைம்பெண் நாகு, ஊணங்கந்தைத் தோட்டம், தொளசுபாகை | இராமையா அல்லது இராமு (மகன்), வேலு அல்லது மகாவிஷ்ணு (மகன்), இரங்கசாமி (மகன்) |
| N 9685/CC/I—31.7.51 | பாச்சா சுல்தான், மெத்தக்கொடைத் தோட்டம், உடகாத்தனே, கம்பளை | பாத்தமுத்து (மனைவி), நாகூர் (மகன்), அசன் (மகன்), நாகூர் (மகன்), பாச்சா (மகன்) |
| J 3—18.7.50 .. | சேருவரன் கறுப்பையா செல்லையா, கொட்டியாக்கலைத் தோட்டம், போகவந்தலாவை | இரத்தினம்மாள் (மனைவி), ஜெயராஜ் அல்லது செல்லையா (மகன்), கிருஷ்ணவேணி (மகள்), சரோசா அல்லது சரோசினி தேவி (மகள்), இராமதாஸ் அல்லது ஜெயராம் (மகன்), வேணுகோபால் (மகன்), இராதா (மகள்), சிறீ ரங்க மோகனராஜ் (மகன்), கண்ணன் பாலா (மகள்) |
| J 515—27.3.51 .. | கண்ணுயிரன் இராமசாமி இலெச்சுமணன், வெள்ளை ஓயாத் தோட்டம், அற்றன் | வீரம்மா (மனைவி), பொன்னம்மா (மகள்), பாலக்கிருஷ்ணன் (மகன்), கதிர்வேலு (மகன்), ஓலகநாதன் (மகன்), பத்மநாதன் (மகன்), சரநாதன் (மகன்) |
| J 519—4.4.51 .. | பாப்பு பாப்பநாயர் கைம்பெண் பூரணம், பி. டபிள்யூ. டி. குடிசை நிரைகள், மஸ்க்கேலியா | தங்கவேலு அல்லது வடிவேலு (மகன்), சுப்பிரமணியன் அல்லது கணபதி (மகன்), சிவக்கொழுந்து (மகன்), சண்முகநாதன் (மகன்) |
| J 761—10.6.51 .. | முத்தையா அல்லது மௌபிறே டேவிட் பொன்னையா, மொறேக் கூட்டம், மஸ்க்கேலியா | சமாதானம் (மனைவி) |
| J 850—28.2.51 .. | சின்னையா சிவானு, செயின்ற் அன்றூஸ் பிரிவு, லக்சபானைக் கூட்டம், மஸ்க்கேலியா | அன்னலெச்சுமி அல்லது அன்னம்மாள் (மனைவி), ஐயாத்துரை (மகன்) |
| J 974—16.1.51 .. | வேம்படி தேக்கன், வளமலைப் பிரிவு, லக்சபானைக் கூட்டம், மஸ்க்கேலியா | காமாட்சி (மனைவி), தெய்வானை (மகள்), மாரியப்பன் அல்லது மகாமுனி (மகன்), செல்வராஜ் (மகன்), வேம்படி (மகன்) |
| J 1091—16.1.51 .. | கந்தசாமி மாயாண்டி, வளமலைப் பிரிவு, லக்சபானைக் கூட்டம், மஸ்க்கேலியா | காமாட்சி (மனைவி), சுப்பிரமணியன் (மகன்), ஜெயலெச்சுமி (மகள்) |
| J 1099—16.1.51 .. | இராமன் அம்மாசி வளமலைப் பிரிவு, லக்சபானைக் கூட்டம், மஸ்க்கேலியா | காமாட்சி (மனைவி), இராமாயி (மகள்) |
| J 1120—15.1.51 .. | அந்தோனி பீச்சைமுத்து, மிட்லோத்தியான் தோட்டம், மஸ்க்கேலியா | செபமாலை மேரி (மகள்), யோசேப்பு (மகன்), அருளந்து (மகன்), யானக்கன் (மகன்) |
| J 1147—15.1.51 .. | செல்லமுத்து கறுப்பையா, மிட்லோத்தியான் தோட்டம், மஸ்க்கேலியா | செல்லம்மா (மனைவி), செல்லமுத்து நாயுடு அல்லது செல்லத்துரை (மகன்), கறுப்பாயி அல்லது சிவபாக்கியம் (மகள்), இராசகோபால் அல்லது பொன்னையா (மகன்), கிருஷ்ணன் அல்லது இராமலிங்கம் (மகன்), பெரியம்மா (மகள்), வெங்கடாசலம் (மகன்) |
| R 737—26.11.50 .. | மருதமுத்து பெருமாள், பம்பறக்கெலித் தோட்டம், நூரளை | சின்னப்பிள்ளை (மனைவி), ஆராயி (மகள்), வீரையா (மகன்) |
| R 1385—6.1.51 .. | கதிர்வேலு முனியாண்டி, மகா எலியாத் தோட்டம், நனு-ஓயா | கிருஷ்ணசாமி அல்லது செல்லத்துரை (மகன்), தொட்டிச்சி அல்லது அம்மாவாசி (மகள்), சுந்தரராசா அல்லது இரத்தினகிரி (மகன்), கறுப்பையா அல்லது வைரப் பெருமாள் (மகன்), சிவலிங்கம் அல்லது மகாலிங்கம் (மகன்) |
| R 2517—12.5.51 .. | சுப்பன் பழனியாண்டி, மேற் பிரிவு, அபொட்போட் தோட்டம், நனு-ஓயா | நாகம்மா (மகள்) |
| R 2856—27.5.51 .. | அப்பாவு முனுசாமி, மேற் பிரிவு, ஓலிபன்ற் தோட்டம், நூரளை | முனியம்மா (மனைவி), தெய்வானை (மகள்), நடராசா (மகன்) |
| R 3326—19.5.51 .. | கதிரவேல் சுப்பிரமணியன், கீழ்ப் பிரிவு, அபொட்போட் தோட்டம், நனு-ஓயா | சிகப்பாயி (மனைவி), சின்னப்பிள்ளை (மகள்), பூசமணி (மகள்) |
| R 3331—19.5.51 .. | அந்தோனி ஆரோக்கியம், கீழ்ப் பிரிவு, அபொட்போட் தோட்டம், நனு-ஓயா | மரிய பாக்கியம் (மனைவி), அந்தோனி அல்லது செபத்தியான் (மகன்), மரியம்மாள் (மகள்), பூரணம் (மகள்), அன்னம்மாள் (மகள்) |
| R 3359—19.5.51 .. | மைக்கேல் செபத்தியான், கீழ்ப் பிரிவு, அபொட்போட் தோட்டம், நனு-ஓயா | சிலுவைரத்தினம் (மகன்), மைக்கேலம்மாள் (மகள்), அந்தோனியம்மா (மகள்) |
| R 3371—19.5.51 .. | மருதை ஆண்டவன், கீழ்ப் பிரிவு, அபொட்போட் தோட்டம், நனு-ஓயா | பெரமாயி (மனைவி), மருதை (மகன்), அக்கம்மா (மகள்), வேம்படி அல்லது மகாமுனி (மகன்), செல்லன் அல்லது செல்லையா (மகன்), கணேசன் அல்லது கணவதி (மகன்), தங்கா (மகள்), பரமராசு (மகன்), சிவானு (மகன்) |
| R 4142—2.6.51 .. | முத்து முதநுச்சாமி, டெஸ்போட் தோட்டம், நனு-ஓயா .. | பெரியம்மா (மனைவி), முத்தம்மா (மகள்), முத்தையா (மகன்), இராமாயி (மகள்), சின்னப்பிள்ளை (மகள்) |
| V 5082—14.5.51 .. | இராமசுந்தரம் வீராச்சாமி அல்லது குமாரசாமி, டம்மேரியாக் கூட்டம், பசறை | நாகம்மா (மனைவி), இராமச்சந்திரன் அல்லது இராமசுந்தரம் (மகன்), மீனாட்சி அல்லது மீனாட்சியம்மாள் (மகள்), பாலசுப்பிரமணியம் அல்லது பாலசண்முகம் (மகன்), இராசரத்தினம் (மகன்) |
| Q 3380/X—26.6.51 .. | இராமததேவர் மெய்யப்பத்தேவர் மெய்யப்பத்தேவர், செயின்ற் மாக்கறெட் கடை வீதி, உடப்புசல்லாவை | அன்னக்கொடி (மனைவி), மேச்சி (மகள்), இலெச்சுமி (மகள்) |

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ் செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| O 4577/X—29.6.51 .. | காளிமுத்து ஏகாம்பரம், பேற் பிரிவு, கேர்க்லீஸ் தோட்டம், உடப்புசல்லாவை | தெய்வானை (மனைவி) |
| O 7220/X—8.7.51 .. | மாரி குணசிங்காரம், வல்டிமார்க் கூட்டம், உடப்புசல்லாவை | சிவபாக்கியம் (மனைவி) |
| R 2039/O/X—6.5.51 .. | குட்டியப்ப மெய்யப்ப மெய்யப்பன், 1 ம் பிரிவு, பூனக்கலைச் கூட்டம், பூனக்கலை | வள்ளியம்மாள் (மனைவி), மெய்யேசுவரி (மகள்), சித்தி ராம்பிகாபாய் (மகள்) |
| Z 4248/X—28.7.51 .. | சூரியன் பொன்னையன் கறுப்பையா, கபறக்கலைப் பிரிவு, பூனக்கலைக் கூட்டம், பூனக்கலை | அஞ்சலை (மனைவி) |
| Z 4892/X—22.7.51 .. | பெரியதம்பி கைம்பெண் மருதமுத்து ஒடையார் சின்னம் மாள், கோணமொட்டாவைத் தோட்டம், அப்புத்தளை | முத்துச்சாமி (மகன்) |
| Y 5900—14.7.51 .. | முத்தையா நடேசன், ஒலியமண்டித் தோட்டம், வதுளை .. | மாரியாயி (மனைவி), சரசுவதி (மகள்), இராமசாமி (மகன்), இந்திரா (மகள்) |
| Y 5913—14.7.51 .. | காளிமுத்து சிலம்பரம், ஒலியமண்டித் தோட்டம், வதுளை .. | அழகம்மா (மனைவி), கந்தசாமி (மகன்), நமசிவாயம் (மகன்), முருகந்தன் (மகன்) |
| DD 2846—12.7.51 .. | சிரங்கன் பழனி, டிக்கோவாத் தோட்டம், பறக்கடுவை .. | தங்கவேல் (மகன்), இராமன் (மகன்) |
| DD 6907—20.9.50 .. | சந்தணம் முனியாண்டி, " எம். " சந்தணம் மேற்பார்த்து, புசல்லைக் கூட்டம், பறக்கடுவை | மனோன்மணி (மகள்), பாலசுப்பிரமணியம் (மகன்) |
| DD 8126—31.7.51 .. | முனியன் முத்தையா, லசகேனைத் தோட்டம், தெறனியாக் கலை | பூபதி (மனைவி), சுப்பிரமணியம் (மகன்), இராசலிங்கம் (மகன்) |
| J 653—13.5.51 .. | மருதை பெரியசாமி, மிட்லோத்தியான் தோட்டம், மஸ்க் கேலியா | குழந்தாயி (மனைவி) |

---

4 D ம் மாதிரிப்பத்திரம்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்

சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் 3 ம் உட்பிரிவின்படியும் 7 ம் பிரிவின் 3 ம் உட்பிரிவின்படியும் இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்விண்ணப்பத் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி, யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி விக்ரர் யோசேப்பு அரேல்ட் குணசேகரா ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடைகூறுபவரின் முழுப் பெயரும் விலாசமும் இடப்படவேண்டும்.

கொழும்பு,
1958 ம் ஆடு கார்த்திகைமீ 4 ந் உ.

வி. யோ. அ. குணசேகரா,
இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ் செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ் செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| C 9553—4.8.51 .. | நாகூர் அடிமை கைம்பெண் காளிங்கு பாத்துமா, 171, பிச்சோட் ஒழுங்கை, கொழும்பு | பீர் முகமது (மகன்), அப்துல் யபார் (மகன்), கறிம் நிசா (மகள்), பாத்துமுத்து சொகாரு (மகள்), செய்யது அப்பாசு (மகன்), பதுர்தீன் (மகன்), இராகிம் பீபீ (மகள்), செயினுல் அப்தீன் (மகன்) |
| J 341—25.1.51 .. | கறுப்பையா கைம்பெண் அழகர்சாமி வீராயி, லொனுக் கூட்டம், வட்டவளை | பழனியம்மா அல்லது பத்மா (மகள்), சோதி அல்லது சோதியம்மா (மகள்), ஜெகநாதன் (மகன்) |

---

## மதுபரிபாலனச் சட்ட அறிவித்தல்

**பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை நகர சாராயத் தவறணையை மீண்டும் திறப்பதற்குச் சம்மத வாக்கெடுத்தல்**

இத்தால் சகலரும் அறிய வேண்டியது பதுளை மாவட்ட அதிபதி அவர்கள் 1925 ம் ஆண்டு ஆவணி மாதம் 14 ந் திகதி பிரசுரிக்கப்பட்ட 7,478 ம் இலக்க அரசினர் கெசெற் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 180, 194, 187, 221, 225, 231 ம் இலக்க மதுபரிபாலன விளம்பரங்களால் திருத்தியமைக்கப்பட்ட 146 ம் இலக்க மதுபரிபாலன விளம்பரத்தால் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் கீழ்க்குறித்துள்ள சாராயத்தவறணை குறிச்சிக்குள் வாக்களிக்க உரிமையுள்ள குடிசனங்களின் 100 க்கு 60 வீதம் வாக்காளர்கள் பண்டாரவளை நகர சாராயத்தவறணையை மீண்டும் திறப்பதற்கு விரும்புகிறார்களாவென்பதை அறியும் பொருட்டு கீழ்க்குறிக்கப்படும் இடத்தையும் திகதியையும் ஜன சம்மத வாக்கெடுப்புக்கென நியமித்திருக்கிறார்.

முற்பகல் 8 மணி தொடக்கம் மத்தியானம் 12 மணி வரைக்கும், பிற்பகல் 1 மணி தொடக்கம் 6 மணி வரைக்கும் வாக்கெடுப்பு நடைபெறும்.

கடைசி வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டவர்களன்றி வேறு எவரும் வாக்குப்பதிவுசெய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

தவறணையின் பெயர் : பண்டாரவளை நகர சாராயத்தவறணை.

வாக்கெடுக்கும் திகதி : 1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ம் திகதி.

வாக்குப் பதிவு செய்யுமிடம் : பண்டாரவளை கோட்டுக் கட்டிடம்.

ஒப்பம். பீ. பி. வீ. எ. ஜே. பி. சேனரட்ன
அரசாங்க மாவட்ட அதிபதி, பதுளை.

பதுளைக் கச்சேரி,
1958 ம் ஆடு நொவெம்பர் மீ 1 ந் உ.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஒடர் அல்லது போஸ்ரல் ஒடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிரீம் கோட் புறெக்ரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன் பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவுசெய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | | ரூ. ச. | | |
|---|---|---|---|---|
| ஒரு வருட சாந்தா | .. .. | 15 0 | .. | ஒவ்வொரு பகுதிக்கும் |
| | | 7 0 | .. | ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி | .. | 0 25 | | |
| | | 0 31 | .. | தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | .. | 0 10 | | |
| | | 0 14 | .. | தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்க பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.